Victorian Tamil Association (Inc)
(Formally Eelam Tamil Association Victoria Inc)
Established: 1978, ABN:91 718 358 556, Incorporation No: A0007477N
விக்ரோரியா தமிழ்ச் சங்கம்
P O BOX 4337, Burwood East LPO, Burwood East – 3151. www.etavic.org.au/

# விக்டோரியத் தமிழ்ச் சங்கத்தின் - முத்தமிழ் விழா 2019
## பேச்சு, இசை, கட்டுரை, உரையாடல் போட்டிக்கள் பற்றிய விபரங்கள்

போட்டி நாள் : சனிக்கிழமை, 05.10.2019, காலை 8:30மணி - மாலை 2:00மணி
**போட்டி இடம் : Wesley College, 620, High Street Road, Glen Waverley, 3150**

1. இப்போட்டிகளில், தற்போது அவுஸ்திரேலிய பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் சிறுவர்கள் யாவரும் பங்குபற்றலாம். போட்டிகளில் பங்குபற்றுவதற்கென்று தயாரிக்கப்பட்டுள்ள விண்ணப்ப படிவங்களிலேயே விண்ணப்பம் செய்தல் வேண்டும். விண்ணப்ப படிவம் முழுமையாக நிரப்பப்பட வேண்டும்.

2. தமிழ்ப் பாடசாலைகள் எதிலும் மாணவர்களாய் இல்லாத சிறுவர்களும் (விக்டோரியா மாநிலம் தவிர்ந்த வேறு மாநிலங்களில் வசிக்கும் சிறுவர்கள் உட்பட) இப்போட்டிகளில் பங்குபற்றலாம். இவர்கள் பின்வரும் இணையத்தளம் அல்லது மின்அஞ்சல் ஊடாக தமது விண்ணப்ப படிவங்களை அனுப்பி வைக்கலாம்:

மின்அஞ்சல்: vta.competition@gmail.com (தொலைபேசி : 0403 089 451).

இணையத்தளம்: https://competition.vta.org.au/

3. ஒரு குடும்பம் முத்தமிழ் விழா போட்டிகளில் பங்குபற்றுவதற்கான பதிவுக் கட்டணம் $5.00 மட்டுமே. மேலதிகமாக போட்டிகள் ஒவ்வொன்றிற்கும் $5.00 அறவிடப்படும். உதாரணமாக ஒரு பிள்ளை பேச்சுப் போட்டியிலும் பாட்டுப்போட்டியிலும் பங்குபற்றினால் மொத்தம் $15.00 செலுத்த வேண்டும்.. ஒரு குடும்பத்திலிருந்து இரண்டு பிள்ளைகள் பேச்சுப் போட்டியிலும் பாட்டுப்போட்டியிலும் பங்குபற்றினால், இரு பிள்ளைகளுக்குமான மொத்தக் கட்டணம் $25.00 மட்டுமே.

4. விண்ணப்ப முடிவுத் திகதி 20.09.2019
**எதுவித காரணம் கொண்டும் போட்டி நாள் அன்று விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளபடமாட்டாது.**

### 5. பிரிவுகளின் விபரங்கள்

| பிரிவு | வயது | பிறந்த திகதி |
|---|---|---|
| மழலையர் பிரிவு | 4 – 5 வயதுக்கு உட்பட்டோர் | 01-07-2015 – 30.06.2014 |
| பாலர் பிரிவு | 5 – 6 வயதுக்கு உட்பட்டோர் | 01-07-2014– 30.06.2013 |
| ஆரம்பப் பிரிவு | 6 – 8 வயதுக்கு உட்பட்டோர் | 01-07-2013 – 30.06.2011 |
| கீழ்ப் பிரிவு | 8 – 10 வயதுக்கு உட்பட்டோர் | 01-07-2011– 30.06.2009 |
| மத்திய பிரிவு | 10 – 12 வயதுக்கு உட்பட்டோர் | 01-07-2009– 30.06.2007 |
| மேற்ப் பிரிவு | 12 – 14 வயதுக்கு உட்பட்டோர் | 01-07-2007– 30.06.2005 |
| அதிமேற்ப் பிரிவு | 14 வயதுக்கு மேற்பட்டோர் | 30.06.2005க்கு முன்னர் |

**6. பேச்சுப் போட்டி** (பேச்சுப் போட்டிக்கான தேர்வுப் படிமானம் இணைக்கப்பட்டுள்ளது)
**மழலையர் பிரிவு, பாலர் பிரிவு, ஆரம்பப்பிரிவு, கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு, அதிமேற்பிரிவு** ஆகிய எல்லாப் பிரிவுகளுக்கும் பேசுவதற்கான விபரங்கள் இங்கு இணைக்கப்பட்டுள்ளன.

**7. இசைப் போட்டி** (இசைப் போட்டிக்கான தேர்வுப் படிமானம் இணைக்கப்பட்டுள்ளது)
**மழலையர் பிரிவு, பாலர் பிரிவு ஆரம்பப்பிரிவு, கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு, அதிமேற்பிரிவு** ஆகிய எல்லாப் பிரிவுகளுக்கும் உரிய பாடுவதற்கான விபரங்கள் இங்கு இணைக்கப்பட்டுள்ளன. குறித்த பாடல்களை மனனம் செய்து இசையோடு பாடுதல் வேண்டும். தெரிவு செய்யப்பட்ட ராகத்திலும் தாளத்திலும் மட்டுமே இசையமைத்துப் **பாடவேண்டும்**.

**8. கட்டுரைப் போட்டி** (கட்டுரைப் போட்டிக்கான தேர்வுப் படிமானம் இணைக்கப்பட்டுள்ளது)
இப்போட்டி கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு, அதிமேற்பிரிவு ஆகிய பிரிவுகளுக்கு மட்டுமே நடாத்தப்படவுள்ளது. எல்லாப் பிரிவுகளுக்கும் உரிய தலைப்புகள் தயாரிக்கப்பட்டு இங்கு இணைக்கப்பட்டுள்ளன.

**9. கலந்துரையாடல் போட்டி** (கலந்துரையாடல் போட்டிக்கான தேர்வுப் படிமானமும் இணைக்கப்பட்டுள்ளது)
இப்போட்டி **மத்தியபிரிவு, மேற்பிரிவு, அதிமேற்பிரிவு** ஆகிய பிரிவுகளுக்கு மட்டுமே நடாத்தப்படவுள்ளது. உரிய விபரங்கள் இங்கு இணைக்கப்பட்டுள்ளன.

## பேச்சுப் போட்டி

## 1) மழலையர்பிரிவு 4 - 5 வயதுக்கு உட்பட்டோர்

***(தொடங்கும் நேரம் காலை 8.30 மணி)***

**தமிழ்**

"தமிழுக்கு அமுதென்று பேர்

அந்தத் தமிழ் இன்பத் தமிழ்

எங்கள் உயிருக்கு நேர்"

எமது தாய் மொழியான தமிழை

பேணிப் பாதுகாப்பது எமது கடமையாகும்

தமிழ்ப் பாடசாலைக்குப் போவோம்

தமிழை கற்போம்

தமிழில் பேசுவோம்

தமிழராய் வாழ்வோம்

**நன்றி வணக்கம்.**

30 **சொற்கள்**

**பேச்சுப் போட்டி (2) - பாலர் பிரிவு: 5 - 6 வயதுக்கு உட்பட்டோர்**

*(தொடங்கும் நேரம் காலை 8.30 மணி)*

## சுத்தம் சுகம் தரும்

"சுத்தம் சுகம் தரும்" என்பது ஆன்றோர் வாக்கு.

நாம் அணியும் உடைகள், உண்ணும் உணவு, குடிக்கும் நீர், எமது உடல் யாவும் எப்போதும் சுத்தமாக இருந்தால் நோய்கள் எம்மை அணுகாது.

மற்றும் நாம் வசிக்கும் வீடு, வீட்டின் சுற்றுப்புறங்கள், பாடசாலைகள், வீதிகள் போன்றவையும் சுத்தமாக இருத்தல் வேண்டும்.

உடை, உணவு, நீர் போன்றவை சுத்தமாக இருந்தால் வியாதிகள் எம்மைப் அணுகமாட்டா.

சுத்தம் உள்ள இடமெங்கும் சுகமும் உண்டு.

**நன்றி வணக்கம்.**

50 **சொற்கள்**

**பேச்சுப் போட்டி (3) - ஆரம்பப் பிரிவு: 6-8 வயதுக்கு உட்பட்டோர்**

*(தொடங்கும் நேரம் காலை 8.30 மணி)*

# சமூக சேவை

"மக்கள் சேவையே மகேசன் சேவை" என நம் முன்னோர் கூறியுள்ளார்கள். சமூக சேவையை செய்வதற்கு பல வழிகள் உள்ளன. தேவைக்கேற்ப பொருள் உதவி, பண உதவி, சரீர உதவி என்று பலவிதமாக மற்றவர்களுக்கு உதவி செய்யலாம். இது மட்டுமல்ல வீட்டில் அல்லது அயலிலுள்ள முதியவர்களுடன் சில நிமிடங்கள் ஆறுதலாக பேசுவது கூட ஒரு விதத் தொண்டே ஆகும்.

சமூக சேவைக்காக நோபல் பரிசு பெற்ற அன்னை தெரேசாவை மறக்க முடியுமா?

"சொந்த சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டும் –

சிந்தை இரங்காரடி கிளியே செய்வதறியாரடி" என்று பாரதியார் கஷ்டத்தில் இருப்பவர்களைப் பார்த்தும் இரங்காதவர்களை சாடிக்கொண்டதும் நினைவில் வருகிறது.

சமூக சேவை செய்வதற்கு வயதெல்லை கிடையாது.

வாருங்கள்! வாருங்கள்!

எமது நேரத்தில் அல்லது பொருளில் சிறிதளவையேனும் சமூக சேவைக்கு வழங்குவோம்.

**நன்றி வணக்கம்.**

78 **சொற்கள்**

<u>பேச்சுப் போட்டி (4) -</u> கீழ்ப் பிரிவு: 8-10 வயதுக்கு உட்பட்டோர்

*(தொடங்கும் நேரம் காலை 8.30 மணி)*

# <u>தமிழ் மொழி</u>

உலக மொழிகளிலேயே முன்னோடி மொழியாகக் கருதப்படுவது நம் தமிழ் மொழியே.

“கல்தோன்றி மண்தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்த மொழி” தமிழ் என்பார்கள். ஒழுக்கத்தையும், பண்பாட்டையும், விருந்தோம்பலையும் ஆதிகாலம் முதலே கற்றுக்கொடுத்து வந்த மூத்த மொழி தமிழ் மொழி.

தமிழ் மொழியில் பல அரிய நூல்கள் உள்ளன. திருக்குறள், சிலப்பதிகாரம், கம்ப ராமாயணம், திருவாசகம் போன்றவை சில உதாரணங்கள் ஆகும். இதன் மூலம் பல கலாச்சார விடயங்களை நம் வாழ்வில் தெரிந்து கொள்ளலாம்.

உலகத்திற்கே பொதுமறையான திருக்குறள் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

மொழி எண்ணத்தினை வெளிப்படுத்த உதவும் ஒரு கருவிமட்டுமல்ல, அது ஒரு இனத்தின் அடையாளமும் ஆகும். ஒரு இனத்தின் பண்பாட்டையும் வாழ்வியல் இலக்கணங்களையும், பாரம்பரியங்களையும் அடுத்த தலைமுறைக்கு எடுத்துரைக்கும் முதற்காரணி மொழியே ஆகும். எனவே எமது அரும் பெரும் தாய்மொழியான தமிழை அழிய விடாது பேணிக் காப்போம்.

**நன்றி வணக்கம்.**

94 **சொற்கள்**

Victorian Tamil Association (Inc)
(Formally Eelam Tamil Association Victoria Inc)
Established: 1978, ABN:91 718 358 556, Incorporation No: A0007477N
விக்ரோரியா தமிழ்ச் சங்கம்
P O BOX 4337, Burwood East LPO, Burwood East – 3151. www.etavic.org.au/

## பேச்சுப் போட்டி (5): மத்திய பிரிவு: 10-12 வயதுக்கு உட்பட்டோர்

*(தொடங்கும் நேரம் காலை 8.30 மணி)*

சி. வி. இராமன் (1888 - 1970)

சந்திரசேகர வெங்கட் இராமன் 1888ஆம் ஆண்டு தமிழ் நாட்டிலுள்ள திருச்சியில் பிறந்தார். இவர் தனது 13வது வயதில் புலமைப் பரிசில் பெற்று பல்கலைக்கழகம் சென்றார்.தனது 15ஆம் வயதில் பௌதீகம் ஆங்கிலம் ஆகிய பாடங்களில் தங்கப்பதக்கம் பெற்று பட்டம் பெற்றார். தனது 19வது வயதில் முதுகலை பட்டமும் பெற்றார்.அதன் பின் மேற்படிப்புக்காக இங்கிலாந்து செல்லத் தயாரானார். எனினும் வைத்தியர்களின் ஆலோசனையின் பேரில் இவரின் பயணம் தடைப்பட்டது.

அறிவியல் ஆராய்ச்சித் துறையில் வேலை வாய்ப்புக்கள் இல்லாத காரணத்தால் இந்திய அரசு நிதித்துறையில் 1907ஆம் ஆண்டு வேலைக்குச் சேர்ந்தார். அதிலிருந்து 1917இல் விலகி, கல்கத்தா பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகச் சேர்ந்து 15 வருடங்கள் கடமையாற்றினார். கல்கத்தாவில் உள்ள அறிவியல் வளர்ச்சிக் கழகத்திலும் கல்கத்தா பல்கலைக்கழகத்திலும் ஒளிச்சிதறல் பற்றி ஆராச்சி செய்து வந்தார்.

இவருடைய ஆராய்ச்சியின் பயனாக 'இராமன் விளைவு' என்னும் கோட்பாடு உலகிற்குக் கிடைத்தது. இக்கண்டுபிடிப்புக்காக இராமனுக்கு 1930ஆம் ஆண்டு பௌதிகத்திற்கான நோபல் பரிசு கிடைத்தது.

இவருக்கு கிடைத்த விருதுகளில் 1929ஆம் ஆன்டு இங்கிலாந்து அரசின் “சேர் பட்டமும், 1954ஆம் ஆண்டு இந்தியாவின் அதி உயர் விருதான 'பாரத ரத்னா' விருதும் குறிப்பிடத்தக்கவை.

**நன்றி. வணக்கம்.**

**120 சொற்கள்**

பேச்சுப் போட்டி (6) - மேற் பிரிவு: 12-14 வயதுக்கு உட்பட்டோர்

*(தொடங்கும் நேரம் காலை 8.30 மணி)*

# பெருந்தலைவர் காமராஜர்

மண்ணில் பிறக்கும் ஒவ்வொருவரும் தங்களின் பிறப்பிற்கான அர்த்தத்தை நிலைநாட்டிவிட்டு செல்லவேண்டும் என்பார்கள். தனது பிறப்பையும், செயலையும் அர்த்தமுள்ளதாக மாற்றியவர்தான் பெருந்தலைவர் காமராஜர்.
காமராஜர் படித்தது ஆறாம் வகுப்புவரையுமே. ஆங்கிலக் கல்வி அறிவு இல்லாமலும், ஆறாம்வகுப்பு கல்வியுடனும் முதல் அமைச்சர் பதவியேற்ற அவர் 9 ஆண்டுகளாக தமிழ் நாட்டுக்கு தலை சிறந்த தலைமைத்துவத்தை வழங்கினார்.
அவர் முதல் அமைச்சர் ஆனதும் நாட்டு மக்களின் கல்வியில்தான் முதல் அக்கறை செலுத்தினார். உணவின்மையால் மாணவர்களின் கல்வி கெட்டுப்போகக்கூடாது என்பதற்காக பள்ளிகளில் இலவச உணவுத்திட்டத்தை அறிமுகம் செய்தார்.

எழுத்தறிவு இன்மையைப் போக்க 11 ஆம் வகுப்பு வரை இலவச கட்டாய கல்வியை அறிமுகப்படுத்தினார். அனைத்துப் பள்ளி குழந்தைகளுக்கும் இலவச சீருடை வழங்கினார் . அரசியலில் தன்னை எதிர்த்தவர்களையே தன்னுடன் சேர்த்துக்கொண்டார். அவரது காலகட்டத்தில்தான் இந்தியாவிலேயே மிகச்சிறந்த முறையில் நிர்வகிக்கப்பட்ட மாநிலம் என்ற பெருமையை தமிழ் நாடு பெற்றது

தமிழுக்கு நல்ல அங்கீகாரத்தை பெற்று கொடுத்தவர் காமராஜர். நீதி மன்றம் அரசு அலுவலகம் அனைத்திலும் தமிழை கொண்டுவந்தார். இரண்டு முறை பிரதமராகும் வாய்ப்பிருந்தும், லால்பகதூர் சாஸ்திரி, இந்திரா காந்தி ஆகியோரை பிரதமராக்கியவர் காமராஜர். அவர் இறக்கும்போது மிச்சம் இருந்தது பத்து கதர் வேஷ்டிகள், சட்டைகள், மற்றும் நூறு ரூபாய்க்கும் குறைவான பணமும் மட்டுமே.

இன்றைக்கு தமிழகம் கண்டுள்ள பல வளர்ச்சிகளுக்கும் காரணமானவர் இவரே. தமிழகத்தின் உண்மையான பொற்கால ஆட்சி என்றால் அது காமராஜரின் ஆட்சி மட்டுமே.

**நன்றி வணக்கம்.** 150 **சொற்கள்**

பேச்சுப் போட்டி (7): அதிமேற் பிரிவு : 14 வயதுக்கு மேற்பட்டோர்
(தொடங்கும் நேரம் காலை 8.30 மணி)

# ஆறுமுக நவலர்

மிகப்பழைய காலத்திலிருந்து தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு பலர் பங்காற்றியுள்ளனர். தமிழ் புலவர்கள் எழுத்தாளர்கள் பதிப்பாளர்கள் கவிஞர்கள் அறிஞர்கள் போன்ற பல்வேறு பிரிவினரும் இதில் அடங்குவர். ஈழத்திலும் தமிழ்நாட்டிலும் நூறுக்கணக்கான தமிழ் அறிஞர்கள் தோன்றி தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு அளப்பரிய தொண்டுகளை ஆற்றியுள்ளனர். ஈழத்து அறிஞர்களில் நல்லூர் ஆறுமுக நவலர் முக்கியமான ஒருவர் ஆவர்.
பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் மொழியின் வளர்ச்சிக்குப் பல்வேறு வழிகளில் சேவை செய்தவராக ஆறுமுக நாவலர் விளங்குகிறார். இவர் 1822ஆம் ஆண்டில் யாழ்ப்பணத்தில் உள்ள நல்லூரில் பிறந்தார். ஆறுமுகம்பிள்ளை என்பது இவரது இயற்பெயராகும். நல்லூர் சுப்ரமணியம் ஆசிரியரிடம் நீதி நூல்களையும் தமிழையும் கற்றார்.
சரவணமுத்து புலவரிடமும் சேனாதிராசா முதலியரிடமும் உயர் கல்வி கற்று தமிழ் சமஸ்கிருதம் இரண்டிலும் புலமை மிக்கவராகத் திகழ்ந்தார்.அக்காலத்தில் யாழ்ப்பணத்தில் முன்னணிப் பாடசாலையான மெதடிஸ்ட் ஆங்கிலப் பாடசாலையில் ஆங்கிலம் கற்று இருப்பது வயதில் அங்கேயே ஆசிரியரானார். சைவ பக்தரான இவர், பரிசுத்த வேதாகமத்தை தமிழில் மொழிபெயர்க்க பேர்சிவல் பாதிரியாருக்கு உதவி செய்தார். தமிழ்நாட்டிலுள்ள திருவாடுதுறை ஆதீனத்தில் இவர் பிரசங்கம் செய்தர். அப்போது இவருக்கு நாவலர் என்ற பட்டம் வழங்கப்பட்டது.

தமிழ் உரைநடை சிறந்த முறையில் வளர்வதற்கு இவர் உறுதுணையாக இருந்தார். யாழ்ப்பாணத்திலும், தமிழ்நாட்டிலும் அச்சகங்களை அமைத்து பல்வேறு தமிழ் நூல்களைப் பதிப்பித்தார்.நன்னூல் காண்டிகை உரை, திருவிளையாடற்புராண உரை போன்றவற்றை எழுதிப் பதிப்பித்தார்.திருக்குறள் பரிமேலழகர் உரை, ஆத்திசூடி, கொன்றைவேந்தன், ஞானக்கும்மி, வச்சிரதண்டம், யேசுமத பரிகாரம் போன்ற பல நூல்களையும் அச்சிட்டு வெளியிட்டார்.இலக்கணக் கொத்து, இலக்கணச் சுருக்கம், இலக்கண விளக்கச் சூறாவளி, சைவ வினாவிடை, பாலபாடம் போன்ற பல நூல்களையும் எழுதி வெளியிட்டார். 'நல்லை நகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல் சொல்லுதமிழ் எங்கே' என்று கூறுமளவுக்கு தமிழ்த் தொண்டாற்றினார். **(175)**

**நன்றி வணக்கம்.**

Victorian Tamil Association (Inc)
(Formally Eelam Tamil Association Victoria Inc)
Established: 1978, ABN:91 718 358 556, Incorporation No: A0007477N
விக்ரோரியா தமிழ்ச் சங்கம்
P O BOX 4337, Burwood East LPO, Burwood East – 3151. www.etavic.org.au/

<u>இசைப் போட்டி (1) </u>மழலையர் பிரிவு: 4 - 5 வயதுக்கு உட்பட்டோர்
*(தொடங்கும் நேரம் காலை 8.30 மணி)*

**பாட்டுப்பாடி தாங்கப்பா**

**பாடவேண்டும் நான்**

**பாட்டி சொன்ன பாட்டெல்லாம்**

**பழைய பாட்டுத்தான்**

**பாடி பாடி மயிலைப்போல**

**ஆடவேண்டும் நான்**

**கூவிக் கூவிக் குலைப்போல**

**கூவ வேண்டும் நான்**

----------------------------

இசைப் போட்டி (2) பாலர் பிரிவு: 5 - 6 வயதுக்கு உட்பட்டோர்

*(தொடங்கும் நேரம் காலை 8.30 மணி)*

***சுப்ரமணியப் பாரதியார்***

**யாதுமாகி நின்றாய் காளி**

**எங்கும் நீ நிறைந்தாய்**

**தீது நன்மை எல்லாம் காளி**

**தெய்வ லீலையன் றோ**

**பூதமைந்து மானாய் காளி**

**பொறிகளைந்து மானாய்**

**போதமாகி நின்றாய் காளி**

**பொறியை விஞ்சி நின்றாய்**

--------------------------------

**<u>இசைப் போட்டி (3) ஆரம்பப் பிரிவு</u>: 6-8 வயதுக்கு உட்பட்டோர்**
***(தொடங்கும் நேரம் காலை 8.30 மணி)***

*இராகம்: மாயாமாளவ கௌளை*
*தாளம்: ஆதி*
*இயற்றியவர்: முத்துத்தாண்டவர்*

*பல்லவி:*

*ஆடிக்கொண்டார் அந்த வேடிக்கை காணக்கண்*

*ஆயிரம் வேண்டாமோ.*

*அனுபல்லவி*

*நாடித் துதிப்பவர் பங்கில் உறைபவர்*

*நம்பர் திருச்செம்பொன் அம்பலவாணர்*

*சரணம்*

*ஆரநவமணி மாலைகள் ஆட ஆடும் அரவம் படம் விரித்தாட*

*சீரணி கொன்றை மலர் தொடை ஆடச் சிதம்பரத் தேர் ஆட*

*பேரண் வேதியர் தில்லை மூவாயிரம் பேர்களும் பூசித்துக் கொண்டுநின்றாட*

*காரணி காளி எதிர்த்து நின்றாடக் கனகசபை தனிலே*

<u>இசைப் போட்டி (4)</u> கீழ்ப் பிரிவு: 8 - 10 வயதுக்கு உட்பட்டோர்
*(தொடங்கும் நேரம் காலை 8.30 மணி)*

***<u>இராகம் : அமிர்தவாஷினி</u>***
***<u>தாளம்: ஆதி</u>***
***<u>இயற்றியவர்: தண்டபாணி தேசிகர்</u>***

***பல்லவி***
***எனை நீ மறவாதே அங்கயற்கண்ணி***
***எனை நீ மறவாதே***

***அனுபல்லவி***
***உன்னை மறந்தோர்க்கெல்லாம் உலகினில்***
***வாழ்வுண்டோ***
***உன்போல் ஒரு தெய்வம் உலகினில் வேறுண்டோ***

***சரணம்***
***நாட்டினிலே மக்கள் வாழ்வு சிறந்திட***
***நலங்களெல்லாம் தந்து மகிழ்ப்பவனே***
***பாட்டினிலே இசை கூட்டி எனக்களித்த***
***பைந்தமிழ்ச் செல்வியே பாண்டியன் மகளே.***

Victorian Tamil Association (Inc)
(Formally Eelam Tamil Association Victoria Inc)
Established: 1978, ABN:91 718 358 556, Incorporation No: A0007477N
விக்ரோரியா தமிழ்ச் சங்கம்
P O BOX 4337, Burwood East LPO, Burwood East – 3151. www.etavic.org.au/

இசைப் போட்டி (5) மத்திய பிரிவு: 10 - 12 வயதுக்கு உட்பட்டோர்

*(தொடங்கும் நேரம் காலை 8.30 மணி)*

**இராகம் : ஆனந்தபைரவி**
**தாளம்: ஆதி**
**இயற்றியவர்: பாபநாசம் சிவம்**

**பல்லவி**

சிங்கார வேலவன் வந்தான் எந்தனையாள

**அனுபல்லவி**

பொங்காதர வோடும் அடங்கா மகிழ்வோடும்

பெருங்காத லோடும் அயன் தங்கமயலினிடை துங்கவடிவுடனே

(சிங்கார)

**சரணம்**

கந்தன் பணியும் அன்பர் சொந்தம் கருணை கொள்

முகுந்தன் மருகன் முருகன்

முன்தன் வினைப்பயந்த பந்தம் தொலைந்தருளை

இந்தா இந்தா என்று ஏழைக்குடி முழுதும் வாழ அருள்புரிய

(சிங்கார)

Victorian Tamil Association (Inc)
(Formally Eelam Tamil Association Victoria Inc)
Established: 1978, ABN:91 718 358 556, Incorporation No: A0007477N
விக்ரோரியா தமிழ்ச் சங்கம்
P O BOX 4337, Burwood East LPO, Burwood East – 3151. www.etavic.org.au/

<u>இசைப் போட்டி (6) </u>மேற் பிரிவு: 12 - 14 வயதுக்கு உட்பட்டோர்

**(தொடங்கும் நேரம் *காலை 8.30* மணி)**

இராகம் : ஸ்ரீரஞ்ஜனி
தாளம்: ஆதி
இயற்றியவர்: பாபநாசம் சிவம்

பல்லவி
கஜவ னா கருணா ஸதன - ஸ்ரீ
ஸங்கரபாலா லம்போதர சுந்தர

அனுபல்லவி
அஜனம ரேந்ரனும் முனிவரும் பணியும்
பங்கஜ சரணா சரணம் - ஸ்ரீ

சரணம்
நீயே மூவுலகிற்காதாரம்
நீயே சிவா கம மந்தர தாரம்
நீயே வாழ்வி லென் ஜீவாதாரம்
நீயருள்வாய் சுமுகா ஓம்கார

-----------------------------------------------

<u>இசைப் போட்டி (7)</u> அதிமேற் பிரிவு:14 வயதுக்கு மேற்பட்டோர்
(தொடங்கும் நேரம் *காலை 8.30 மணி)*

**இராகம்: ரகமாலிகா**

*தீராத வீளையாட்டுப் பிள்ளை - கண்ணன்*
*தெருவிலே பெண்களுக் கோயாத தொல்லை*
*(தீராத)*

*தின்னப்பழம் கொண்டு தருவான் - பாதி*
*தின்கின்ற போதிலே தட்டிப் பறிப்பான்;*
*என்னப்பன் என்னையன் என்றால் - அதனை*
*எச்சிற் படுத்திக் கடித்துக் கொடுப்பான்*
*(தீராத)*

*அழகுள்ள மலர்கொண்டு வந்தே - என்னை*
*அழ அழச் செய்துபின் "கண்ணை மூடிக்கொள்;*
*குழலிலே சூட்டுவேன்" என்பான் - என்னைக்*
*குருடாக்கி மலரினைத் தோழிக்கு வைப்பான்.*
*(தீராத)*

*பின்னலைப் பின்னின் றிழுப்பன்; - தலை*
*பின்னே திரும்புமுன் னேசென்று மறைவான்;*
*வன்னப் புதுச் சேலை தனிலே - புழுதி*
*வாரிச் சொரிந்தே வருத்திக் குலைப்பான்;*
*(தீராத)*

*புல்லாங் குழல் கொண்டு வருவான் -அமுது*
*பொங்கித் ததும்புநற் கீதம் படிப்பான்,*
*கள்ளால் மயங்குவது போலே அதைக்*
*கண்மூடி வாய்திறந் தேகேட் டிருப்போம்.*
*(தீராத)*

**Victorian Tamil Association (Inc)**
(Formally Eelam Tamil Association Victoria Inc)
Established: 1978, ABN:91 718 358 556, Incorporation No: A0007477N
**விக்ரோரியா தமிழ்ச் சங்கம்**
P O BOX 4337, Burwood East LPO, Burwood East – 3151. www.etavic.org.au/

# விக்டோரியத் தமிழ்ச் சங்கத்தின் - முத்தமிழ் விழா 2019

## <u>நேர்முக-கலந்துரையாடல் போட்டிக்கான விபரங்கள்</u>

போட்டி நாள் : சனிக்கிழமை 05.10.2019 காலை 8:30மணி - மாலை 2:00மணி

போட்டி இடம் : **Wesley College, 620, High Street Road, Glen Waverley, 3150 (Melway Ref 62 A12)**

**<u>விதிமுறைகள்:</u>**

1. இப்போட்டியில் அவுஸ்திரேலியாவில் பிரதான பாடசாலையில் கல்வி கற்கும் 10 வயதுக்கும் 16 வயதுக்கும் உட்பட்ட சிறுவர்கள் மட்டும் (மத்தியபிரிவு, மேற்பிரிவு, அதிமேற்பிரிவு ஆகிய ***பிரிவுகளில்***) பங்குபற்றலாம்.
2. போட்டிகளில் பங்குபற்றுவதற்கென்று தயாரிக்கப்பட்டுள்ள விண்ணப்ப படிவங்களிலேயே விண்ணப்பம் செய்தல் வேண்டும்.
3. போட்டியாளர கீழே தரப்பட்டுள்ள 5 தலைப்புகளில் ஒன்றை தமது கலந்துரையாடலுக்கு தெரிவு செய்துகொள்ளலாம்
4. **க**லந்துரையாடல் 5 நிமிடத்திற்க்கு குறையாமலும், 7 நிமிடத்திற்க்கு கூடாமலும் இருத்தல் வேண்டும்
5. போட்டியாளர் விரும்பினால், எடுத்துக்கொண்ட தலைப்பைப் பற்றி சிறு விளக்கம் கொடுக்கலாம் (2 நிமிடத்திற்குள்)
6. போட்டியாளர் நடுவர்களை அணுகி அவர்களை வாழ்த்தும் போதே போட்டி ஆரம்பமாகிறது என்பதை கவனத்தில் கொள்ளவும்
7. **க**லந்துரையாடல் முழுவதும் தமிழில் இருக்க வேண்டும்.
8. **க**லந்துரையாடல் தலைப்புகள்:
    - "எனது பாடசாலை வாழ்க்கை"
    - "எனது குடும்பம்"
    - "பாடசாலை நேரத்திற்கு வெளியே எனது பொழுது போக்கு"
    - "எனக்கு தமிழின்மேல் உள்ள ஆர்வம்"
    - "*நான் அறிந்த* தமிழ் கலாச்சாரம்"

Victorian Tamil Association (Inc)
(Formally Eelam Tamil Association Victoria Inc)
Established: 1978, ABN:91 718 358 556, Incorporation No: A0007477N
விக்ரோரியா தமிழ்ச் சங்கம்
P O BOX 4337, Burwood East LPO, Burwood East – 3151. www.etavic.org.au/

# விக்டோரியத் தமிழ்ச் சங்கத்தின் - முத்தமிழ் விழா 2019

## கட்டுரைப் போட்டிக்கான விபரங்கள்

போட்டி நாள் : சனிக்கிழமை 05.10.2019 காலை 8:30மணி - மாலை 2:00மணி

போட்டி இடம் : **Wesley College, 620, High Street Road, Glen Waverley, 3150**

**விதிமுறைகள்:**

1. இப்போட்டிகளில் அவுஸ்திரேலியாவில் பிரதான பாடசாலையில் கல்வி கற்கும் 8 வயதுக்கும் 18 வயதுக்கும் உட்பட்ட சிறுவர்கள் யாவரும் பங்குபற்றலாம்.

2. போட்டிகளில் பங்குபற்றுவதற்கென்று தயாரிக்கப்பட்டுள்ள விண்ணப்ப படிவங்களிலேயே விண்ணப்பம் செய்தல் வேண்டும்.

3. போட்டியாளரகள் கீழே தரப்பட்டுள்ள வயது அடிப்படையில் உரிய தலைப்பைத் தெரிவு செய்து தங்களை தயார்படுத்திக்கொள்ள வேண்டும்.

4. போட்டிக்கான பிரிவுகளும் உரிய தலைப்புகளும்:

| வயது | தலைப்பு | சொற்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 8-10 | எனது குடும்பம் | 75 இருந்து 100 சொற்கள் வரை |
| 10-12 | தமிழ் பண்டிகைகள் (ஏதாவது ஒன்று) | 100 இருந்து 150 சொற்கள் வரை |
| 12-14 | எனது மதிப்புக்குரிய தமிழ் பெரியார் (விருப்பமான ஒரு பெரியவரைப் பற்றி) | 150 இருந்து 200 சொற்கள் வரை |
| 14 வயதுக்கு மேற்பட்டவர்கள் | நான் அண்மையில் மேற்கொண்ட சுற்றுலா பயணம் | 200 இருந்து 250 சொற்கள் வரை |

Victorian Tamil Association (Inc)
(Formally Eelam Tamil Association Victoria Inc)
Established: 1978, ABN:91 718 358 556, Incorporation No: A0007477N
விக்ரோரியா தமிழ்ச் சங்கம்
P O BOX 4337, Burwood East LPO, Burwood East – 3151. www.etavic.org.au/

# விக்டோரியத் தமிழ்ச் சங்கத்தின் - முத்தமிழ் விழா 2019

## தேர்வுகளுக்கான படிமானம்

### பாட்டுப் போட்டி

| | புள்ளிகள் | | | மொத்தம் |
|---|---|---|---|---|
| இராகம் | தாளம் | உச்சரிப்பு | பாடிய விதம் (முன்னிலைப்படுத்துகை) | |
| 30% | 30% | 20% | 20% | 100% |

### பேச்சுப் போட்டி

| புள்ளிகள் | | | மொத்தம் |
|---|---|---|---|
| மனனம் 40% | உச்சரிப்பு தொனி 30% | நிலை முகபாவம் 30% | 100% |

### <u>கட்டுரைப் போட்டி</u>

| | புள்ளிகள் | | | மொத்தம் |
|---|---|---|---|---|
| கட்டுரையின் ஒழுங் கமைப்பு *(Structure of the Essay)* | உள்ளடக்கம் *(Contents)* | மொழியாற்றல் *(Grammar)* | எழுத்து பிழையின்மை *(Spelling)* | |
| 30% | 30% | 25% | 15% | 100% |

**Victorian Tamil Association (Inc)**
(Formally Eelam Tamil Association Victoria Inc)
Established: 1978, ABN:91 718 358 556, Incorporation No: A0007477N
**விக்ரோரியா தமிழ்ச் சங்கம்**
P O BOX 4337, Burwood East LPO, Burwood East – 3151. www.etavic.org.au/

# விக்டோரியத் தமிழ்ச் சங்கத்தின் - முத்தமிழ் விழா 2019

## பேச்சு, இசை, கட்டுரை, உரையாடல் போட்டிகளுக்கான விண்ணப்பப் படிவம்

போட்டி நாள் : சனிக்கிழமை, 05.10.2019, காலை 8:30மணி - மாலை 2:00மணி
போட்டி இடம் : **Wesley College, 620, High Street Road, Glen Waverley, 3150 (Melway Ref 62 A12)**

பங்குபற்றுபவரின் முழுப் பெயர்(தமிழில்): ____________________________________________

**Participant's Family Name:** ----------------------------------------

**Participant's Given Name:** ----------------------------------------

**Sex**: Female / Male

பிறந்த திகதி **(Date of Birth):** __ / __ / ____

**Day School :** ------------------------------------------------------------------

**Year Level in Day School :** ------------------------------------------------------------------

**Email Address :** ------------------------------------------------------------------

**Mobile No. :** ------------------------------------------------

**Home No. :** ------------------------------------------------

**Address**: ------------------------------------------------------------------------------------------------------------

**Suburb :** ------------------------------------------------------------------

**Postcode**: -------------------------

**Victorian Tamil Association (Inc)**
(Formally Eelam Tamil Association Victoria Inc)
Established: 1978, ABN:91 718 358 556, Incorporation No: A0007477N
விக்ரோரியா தமிழ்ச் சங்கம்
P O BOX 4337, Burwood East LPO, Burwood East – 3151. www.etavic.org.au/

<u>பங்குபற்றும் போட்டி:</u>

பேச்சு ☐ இசை ☐ கட்டுரை ☐ நேர்முக-கலந்துரையாடல் ☐

**பங்குபற்றும் பிரிவு:**

மழலையர்பிரிவு (4 - 5 வயதிற்கு உட்பட்டோர்)----------------- ☐

பாலர் பிரிவு (5 – 6 வயதிற்கு உட்பட்டோர்) ------------------ ☐

ஆரம்பப் பிரிவு (6 – 8 வயதிற்கு உட்பட்டோர்)----------------- ☐

கீழ்ப் பிரிவு (8 – 10 வயதிற்கு உட்பட்டோர்) ------------------ ☐

மத்திய பிரிவு (10 – 12 வயதிற்கு உட்பட்டோர்)-------------------- ☐

மேற் பிரிவு (12 – 14 வயதிற்கு உட்பட்டோர்)------------------- ☐

அதிமேற் பிரிவு (14 வயதிற்கு மேற்பட்டோர்) -------------------- ☐

**மேற்குறிப்பிட்ட விபரங்கள் யாவும் உண்மையென இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.**

பெற்றோர் கையொப்பம்: ---------------------------------------------------- திகதி: ----------------------------------------

தமிழ்ப் பாடசாலை மூலமாக விண்ணப்பித்திருந்தால் :

தமிழ்ப் பாடசாலையின் பெயர்: ------------------------------------------------------------------------------------